செ.வெ.எண். 36/மார்ச் தேதி : 10.03.2017

# தருமபுரி மாவட்டம், புட்டிரெட்டிப்பட்டி, தாசிரஅள்ளி, கே.ஈச்சம்பாடி, ஆர்.கோபிநாதம்பட்டி, கோபிசெட்டிபாளையம், குருபரஅள்ளி, ஒசஅள்ளி, இருமத்தூர், கதிர்நாய்க்கனஅள்ளி, கெலவள்ளி, கேத்துரெட்டிப்பட்டி, கர்த்தானூர், கொசப்பட்டி, கொங்கரப்பட்டி, கெரகோடஅள்ளி, மணியம்பாடி, மோட்டாங்குறிச்சி, மடதஅள்ளி, மொரப்பூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் ரூ. 73.65 இலட்சம் மதிப்பீட்டிலான குடிநீர் பணிகள் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!





தருமபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் வகையில் 24 மணி நேரம் செயல்படும் 1077 கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்களின் அடிப்படையில் களஆய்வு மேற்கொண்டு தேவை அடிப்படையில் புதிய குடிநீர் திட்ட பணிகள் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 43 கிராம ஊராட்சிகளிலும் முழுவதுமாக குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், திறந்த வெளி கிணறுகளை ஆழப்படுத்துதல், கைப்பம்புகள் அமைத்தல், பைப்லைன் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்ய பணிகள் தேர்வு செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் போளையம்பள்ளி கிராம ஊராட்சியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு, பைப்லைன், மின் மோட்டார் மற்றும் மாற்று ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

அவற்றில் மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புட்டிரெட்டிப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.65 இலட்சம், தாசிரஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், கே. ஈச்சம்பாடி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், ஆர். கோபிநாதம்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.25 இலட்சம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், குருபரஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், ஒசஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், இருமத்தூர் ஊராட்சியில் ஒரு

பணிக்கு ரூ. 3.00 இலட்சம், கதிர்நாய்க்கனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், கெலவள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.50 இலட்சம், கேத்துரெட்டிப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 0.75 இலட்சம், கர்த்தானூர் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.00 இலட்சம், கொசப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.85 இலட்சம், கொங்கரப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.50 இலட்சம், கெரகோடஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.50 இலட்சம், மணியம்பாடி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3.50 இலட்சம், மோட்டாங்குறிச்சி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 4.00 இலட்சம், மடதஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.30 இலட்சம், மொரப்பூர் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.65 இலட்சம், நவலை ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், ஓபிளிநாய்க்கனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.65 இலட்சம், புதியம்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 0.75 இலட்சம், இராணிமூக்கனூர் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.65 இலட்சம், ரேகடஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.25 இலட்சம், இராமியனஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 4.00 இலட்சம், சில்லாரஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், சுங்கரஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3.00 இலட்சம், சந்தைப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.75 இலட்சம், சாமாண்டஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.50 இலட்சம், தாளநத்தம் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.00 இலட்சம், தாதனூர் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.65 இலட்சம், தொப்பம்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.00 இலட்சம், போளையம்பள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.00 இலட்சம், வகுத்துப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.00 இலட்சம், வெங்கடதாரஅள்ளி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 2.25 இலட்சம், பசுவாபுரம் ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 3.75 இலட்சம், ஜக்குப்பட்டி ஊராட்சியில் ஒரு பணிக்கு ரூ. 1.50 இலட்சம் என 37 பணிகளுக்கு ரூ. 73.65 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

மேலும் மக்களின் தேவைக்கேற்ப குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் பொருட்டு மாவட்ட கண்காணிப்பு மைய எண். 1077, 1800 425 7016, 1800 425 1071 மற்றும் வாட்ஸ்அப் எண். 8903891077 மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஊரக உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து குடிநீர் தேவை பூர்த்தி செய்ய கூடுதல் திட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.